Date: 14.10.2025
OS.No. 87/2024 (Old 142/2021)
PW-1 உண்ணாமலை, க/பெ. சுப்பிரமணி,

<u>**3ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**</u>

வழக்குச் சொத்தில் 3ல் 1 பாகம் கேட்டுத்தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வழக்குச் சொத்தானது ஆதியில் 1953ம் ஆண்டு கோவிந்தம்மாள் கிரையம் பெற்ற சொத்தாகும் என்றால் சரிதான். மேற்படி எனது தாயார் கோவிந்தம்மாள் எனது தந்தை பூங்காவனத்திற்கு வழக்குச் சொத்தினை தானசெட்டில்மெண்ட் எழுதினார்கள் என்றால் சரிதான். எனது தந்தை 1997ம் ஆண்டு இறந்துவிட்டார் என்றால் சரிதான். மேற்படி எனது தந்தையார் மேற்படி சொத்தினை யாருக்கும் எழுதிவைக்கமால் இறந்துவிட்டார் என்றால் சரிதான். என்னுடன் பிறந்த 3ம் பிரதிவாதி ஆதிலட்சுமி, 2ம் பிரதிவாதி சுப்பிரமணியன் மற்றும் நானும் பூங்காவனத்திற்கும் கோவிந்தம்மாளுக்கும் வாரிசு என்றால் சரிதான். மேற்படி எனது தகப்பனார் இறந்த பின்னர் ஆதிலட்சுமி மற்றும் சுப்பிரமணி ஆகிய எனது உடன் பிறந்தவர்களும் மற்றும் எனது தாயாரும் நானும் தான் மேற்படி சொத்தை அடைய உரிமை பெற்றவர்கள் என்றால் சரிதான். எனது தாயார் 15 வருடத்திற்கு முன்பே இறந்துவிட்டார்கள் என்றால் சரிதான். எனது தாயார் இறந்த பின்னர் ஆதிலட்சுமி, சுப்பிரமணி மற்றும் எனக்கும் தான் தாவா சொத்தைப் பொறுத்து முழு உரிமை உள்ளது என்றால் சரிதான். மேற்படி எனது தம்பியான 2ம் பிரதிவாதி சுப்பிரமணிக்கு அரசு தவறுதலாக பட்டா கொடுத்தது என்றால் சரிதான். மேற்படி வழக்குச் சொத்தினை 2ம் பிரதிவாதி சுப்பிரமணி அவருடைய மகனான ஏழுமலைக்கு கிரையமாக கொடுத்தார் என்றால் சரிதான். மேற்படி 2ம் பிரதிவாதி சுப்பிரமணியனின் மகன் ஏழுமலை 2016ம் ஆண்டு இறந்துவிட்டார் என்றால் சரிதான். பின்னர்

மீண்டும் சுப்பிரமணியனுக்கு தாவா சொத்தைப் பொறுத்து பட்டா வந்துவிட்டது என்றால் சரிதான். மேற்படி தம்பியான சுப்பிரமணியன் 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதியான ஆனந்தனுக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டார் என்றால் என்னை ஏமாற்றி கிரையம் கொடுத்துவிட்டார். 3ம் பிரதிவாதியான ஆதிலட்சுமி எனக்கு 3ல் ஒரு பாகம் கொடுக்க எந்தவொரு ஆட்சேபனையும் இல்லை என்று சொல்கிறார்.

1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை

இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை சாட்சி சொல்ல நீதிபதி ஆகிய என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதனை சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு அதை சாட்சி சரி என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Sd/- (M.C.Arun)
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்